# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2239/54 - 2021 අගෝස්තු මස 06 වැනි සිකුරාදා - 2021.08.06

*2239/54 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*05 ஆவது திருத்தம்*

**அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் அச்சீட்டுச் சேவைப் பிரமாணம்**

*பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட 2013, யூன் மாதம் 26 ஆந் திகதிய மற்றும் 1816/12 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமான அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் அச்சீட்டுச் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வரும் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீள திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,*

**எம். ஏ. பீ. தயாசெனரத்,**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

*2021, ஓகத்து 04.*

பகுதி **I**

*திருத்த இலக்கம் 01 – 2014, திசெம்பர் மாதம் 12 ஆம் திகதிய மற்றும் 1892/40 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமான அறிவித்தல்*
*திருத்த இலக்கம் 02 – 2014, திசெம்பர் மாதம் 19 ஆம் திகதிய மற்றும் 1893/39 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமான அறிவித்தல்*
*திருத்த இலக்கம் 03 – 2016, ஓகத்து மாதம் 23 ஆம் திகதிய மற்றும் 1981/43 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமான அறிவித்தல்*
*திருத்த இலக்கம் 04 – 2019, பெப்புருவரி மாதம் 18 ஆம் திகதிய மற்றும் 2111/4 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமான அறிவித்தல்*


1A — G 34793 - 25 (2021/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பகுதி **II**

**பின்னிணைப்பு - 01**

முதலாவது பின்னிணைப்பில் தொடர் இல. 4 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்கும் பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

**4. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பவியல் சேவை III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல்**

தகைமைகள் :

**4.1 'ஓவ்செட் லித்தோ' அச்சீட்டு இயந்திர இயக்குநர்.**

4.1.1 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கானது –

(i) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் உரிய துறையில் 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

(ii) இத்துறைக்கு உரித்தான N. V. Q. 4 ஆம் மட்டத்தில் தேர்ச்சி சான்றிதழ் பெற்றிருத்தல்

4.1.2 பயிலுனர்களுக்கானது –

(i) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் கணிதம், சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி விஞ்ஞானம் உட்பட ஆகக்குறைந்தது (04) நான்கு பாடங்களில் திறமை சித்திகளுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) கல்விப் பொதுத் தராதரப் (உயர்தர) பரீட்சையில் விஞ்ஞான அல்லது தொழிநுட்பப் பிரிவில் ஒரே அமர்வில் எல்லாப் பாடங்களிலும் (சாதாரணப் பொதுப் பரீட்சையை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் போதுமானதாகும்)

**குறிப்பு :**

கல்விப் பொதுத் தராதரப் (உயர்தர) பரீட்சையில் விஞ்ஞானம் அல்லது தொழில்நுட்பப் பிரிவில் தகுதிபெற்ற போதுமான விண்ணப்பதாரர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில், கல்விப் பொதுத் தராதரப் (உயர்தர) பரீட்சையில் எந்தப் பிரிவிலேனும் ஒரே அமர்வில் அனைத்துப் பாடங்களிலும் சித்தி பெற்றுள்ள (சாதாரண பொதுப் பரீட்சையை தவிர்த்து) மற்றும் ஏனைய தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களைக் கொண்டு எஞ்சியுள்ள வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.

4.1.3 உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு (கீழ்க் குறிப்பிட்ட தகுதிகளில் ஏதாவதொரு தகுதி இருத்தல் அவசியம்)

(i) திணைக்களத்தில் பதினைந்து (15) வருடத்திற்குக் குறையாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்துள்ள அச்சீட்டு அலுவல் உதவியாளர்கள் சேவையில் தரம் II அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் அலுவலராக இருத்தல் அவசியம்.

(ii) திணைக்களத்தில் பத்து (10) வருடங்களுக்குக் குறையாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்துள்ள அச்சீட்டு அலுவல் உதவியாளர் சேவையில் தரம் II அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் அலுவலராக இருப்பதுடன், இலங்கை அச்சக நிறுவனத்தினால் நடாத்தப்படும் லித்தோ கிராப்பி பாடநெறியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) அரசாங்க அச்சகத் திணைக்களத்தில் அச்சுக் கோர்ப்பு (Letter Press) இயந்திர இயக்குநராக ஆறு (06) ஆண்டுகள் அனுபவம் பெற்றுள்ள மற்றும் திணைக்களம் சார் பதவியொன்றில் சேவை உறுதிப்படுத்தப்பட்ட அலுவலராக இருத்தல் வேண்டும்.

(iv) திணைக்களம்சார் பதவியொன்றில் ஏழு (07) வருடங்களுக்குக் குறையாத ஒன்றிணைந்த செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவையை நிறைவு செய்த அலுவலராக இருத்தல் மற்றும் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் கணிதம், சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழியில் திறமை சித்தி பெற்றிருப்பதுடன் ,ஆகக் குறைந்தது நான்கு (04) பாடங்களில் திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் கல்விப் பொதுத் தராதரப் (உயர்தர) பரீட்சையில் எந்த பிரிவிலேனும் (சாதாரணப் பொதுப் பரீட்சையில் தவிர்த்து) ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(v) திணைக்களம்சார் பதவியொன்றில் ஏழு (07) வருடத்திற்குக் குறையாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தை நிறைவு செய்த அலுவலராக இருப்பதுடன் ஓப்செட் லித்தோகிராப்பி சம்பந்தமாக தேசிய மட்டத்தில் (N. V. Q.04) 04 ஆவது மட்டத்தை நிறைவு செய்து தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

4.1.4 இப்பதவிகளுக்காக ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் போது வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கிடையில் 30%, உள்ளக விண்ணப்பதாரிகளுக்கிடையில் 20%,பயிலுனர்களுக்கிடையில் 50% என்ற வீதத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். இருப்பினும், ஒரு பிரிவில் போதுமான தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இல்லாத நிலையில் தேவையான எண்ணிக்கையுடையவர்களை மற்றொரு பிரிவிலிருந்து ஆட்சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்க அழுத்தகருக்கு அதிகாரமுண்டு.

**4.2 அச்சுக் கோர்ப்பு இயந்திர இயக்குநர் :**

4.2.1 வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு -

(i) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் உரிய துறையில் ஐந்து (05) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) இத்துறைக்கு உரித்தான N.V.Q.4 ஆம் மட்டத்தில் தேர்ச்சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

4.2.2 உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு - (பின்வரும் தகுதிகளில் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்)

(i) திணைக்களத்தில் பதினைந்து (15) வருடத்திற்குக் குறையாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவையை நிறைவு செய்த அச்சீட்டு அலுவல் உதவியாளர் சேவையில் தரம் II அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் அலுவலராக இருக்க வேண்டும்.

(ii) திணைக்களம்சார் பதவியொன்றில் 07 வருடங்களுக்குக் குறையாத ஒன்றிணைந்த செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருப்பதுடன், கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழியில் திறமை சித்தி பெற்றிருப்பதுடன் ஆகக் குறைந்தது நான்கு (04) திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சித்தி பெற்றிருத்தல் மற்றும் கல்விப் பொதுத் தராதரப் (உயர்தர) பரீட்சையில் எந்தப் பிரிவிலேனும் (சாதாரண பொதுப் பரீட்சையை தவிர்த்து) ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) திணைக்களம்சார் பதவியொன்றில் ஏழு (07) வருடத்திற்குக் குறையாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்துள்ள அலுவராதல் மற்றும் அச்சுக் கோர்ப்பு சம்பந்தமான தொழிற்றுறை சார்ந்த சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4.2.3 பயிலுநர்களுக்கு -

(i) கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் கணிதம், சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம் உட்பட ஆகக் குறைந்தது நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பதுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாது ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) விஞ்ஞானப் பிரிவு அல்லது தொழில் நுட்பப்பிரிவில் ஒரே அமர்வில் எல்லாப் பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சையை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல் அவசியம். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் போதுமானதாகும்)

**குறிப்பு :**

கல்விப் பொதுத் தராதரப் (உயர்தர) பரீட்சையில் விஞ்ஞானம் அல்லது தொழில்நுட்பப் பிரிவில் தகுதி பெற்ற போதுமான விண்ணப்பதாரர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில், கல்விப் பொதுத் தராதரப் (உயர்தர) பரீட்சையில் எந்தப் பிரிவிலேனும் ஒரே அமர்வில் அனைத்துப் பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் (சாதாரண பொதுப் பரீட்சையைத் தவிர்த்து) மற்றும் ஏனைய தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களைக் கொண்டு எஞ்சியுள்ள வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.

4.2.4 இப்பதவிகளுக்காக ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் போது வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கிடையில் 30%, உள்ளக விண்ணப்பதாரர்களுக்கிடையே 30%, பயிலுநர்களுக்கிடையே 40% என்ற வீதத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். இருப்பினும், ஒரு பிரிவில் போதுமான தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இல்லாத நிலையில் தேவையான எண்ணிக்கையுடையவர்களை மற்றைய பிரிவிலிருந்து ஆட்சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்க அழுத்தகருக்கு அதிகாரமுண்டு.

**4.3 முன் அச்சீட்டு திட்டமிடலாளர்கள் :**

4.3.1 உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு -
(பின்வரும் தகுதிகளில் ஏதாவதொரு தகுதி பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.)

(i) திணைக்களம்சார் பதவியொன்றில் ஏழு (07) வருடங்களுக்குக் குறையாத ஒன்றிணைந்த செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்த மற்றும் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழியில் திறமைச் சித்தி பெற்றிருப்பதுடன், ஆகக் குறைந்தது நான்கு (04) பாடங்களில் திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு சித்தி பெற்றிருத்தல் மற்றும் கல்விப் பொதுத் தராதரப் (உயர்தர) பரீட்சையில் எந்தப் பிரிவிலேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் (சாதாரண பொதுப் பரீட்சையை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) திணைக்களம்சார் பதவியொன்றில் ஏழு (07) வருடங்களுக்குக் குறையாத ஒன்றிணைந்த செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருப்பதுடன், முன் அச்சீட்டு திட்டமிடல் சம்பந்தமான தேசிய தொழிற்றுறை தகைமை (N.V.Q.4) மட்டத்தில் சித்தி பெற்றிருத்தல் அல்லது இலங்கை அச்சக நிறுவனத்தில் மதிப்பீடு செய்தல் மற்றும் செலவு சம்பந்தமான பாடநெறியில் சித்தி பெற்றிருத்தல் அவசியம்.

4.3.2 பயிலுநர்களுக்கு -

(i) கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரண தர) பரீட்சையில் கணிதம், சிங்களம்/ தமிழ்/ஆங்கிலம் மொழி, விஞ்ஞானம் உட்பட ஆகக் குறைந்தது நான்கு (04) பாடங்களில் திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அவசியம்.

(ii) கல்விப் பொதுத் தராதரப் (உயர்தர) பரீட்சையில் விஞ்ஞானம் அல்லது தொழில்நுட்பப் பிரிவில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் (சாதாரண பொதுப் பரீட்சையைத் தவிர்த்து) வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின் படி மூன்று (03) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் போதுமானதாகும்)

**குறிப்பு:**

கல்விப் பொதுத் தராதரப் (உயர்தரம்) பரீட்சையில் விஞ்ஞானம் அல்லது தொழில்நுட்பப் பிரிவில் தகுதி பெற்ற போதுமான விண்ணப்பதாரர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில்,கல்விப் பொதுத் தராதரப் (உயர்தர) பரீட்சையில் எந்தப் பிரிவிலேனும் ஒரே அமர்வில் அனைத்துப் பாடங்களிலும் சித்தி பெற்றுள்ள (சாதாரண பொதுப் பரீட்சையை தவிர்த்து) மற்றும் ஏனைய தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களைக் கொண்டு எஞ்சியுள்ள வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.

4.3.3 இப்பதவிகளுக்காக ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் போது உள்ளக விண்ணப்பதாரிகளுக்கிடையில் 50%,பயிலுநர்களுக்கிடையில் 50% என்ற சதவீதத்துடன் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர். எவ்வாறாயினும், ஏதேனும் பிரிவில் போதுமானளவு தகைமைகளுடன் விண்ணப்பதாரிகள் இல்லாதிருக்கும் சந்தர்ப்பங்களில் அவ்வெண்ணிக்கை ஏனைய பிரிவிலிருந்து ஆட்சேர்த்து கொள்வதற்கு அரசாங்க அழுத்தகருக்கு அதிகாரமுண்டு.

**4.4 அச்சீட்டு பதிப்பாசிரியர் :**

4.4.1 எல்லா விண்ணப்பதாரிகளுக்குமானது -

(i) கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில்–

(அ) சிங்களம் / தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் திறமைச் சித்தி

(ஆ) கணிதப் பாடத்திலும் மற்றும் இரண்டு (02) பாடங்களிலும் திறமைச் சித்திகளுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அவசியம்.

(ii) கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் திறமை சித்தி பெற்றிருப்பதுடன் சகல பாடங்களிலும் (சாதாரண பொது பரீட்சையை தவிர்த்து) ஒரே அமர்வில் சித்தியெய்தியிருத்தல் அவசியம். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் போதுமானதாகும்.)

**குறிப்பு:**

மேற்கூறப்பட்ட பந்தி (ii) இல் குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்ய போதுமான விண்ணப்பதாரர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில், எஞ்சியுள்ள வெற்றிடங்களுக்கு கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் அல்லது உயர்தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்திபெறாத விண்ணப்பதாரர்கள் ஆங்கிலப் பாடத்தில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் ஏ சித்தி அல்லது பீ சித்தி பெற்றிருத்தல் கவனத்தில் எடுக்கப்படும்.

4.4.2 இப்பதவிக்காக முதலில் உள்ளக விண்ணப்பதாரர்களிடையே தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். வெற்றிடங்களை நிரப்புவதற்காக உள்ளக விண்ணப்பதாரர்கள் போதுமான எண்ணிக்கை இல்லாத சந்தர்ப்பத்தில் பயிலுநர்கள் அல்லது வெளிவாரி விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

4.4.3 இப்பதவிக்காக வெளிவாரி விண்ணப்பதாரர்களிடையே, ஆட்சேர்த்துக் கொள்ளப்படுபவர்கள் முதலில் பயிலுநர்களாக ஆட்சேர்க்கப்படுவார்கள். பயிலுநர்களை தேர்ந்தெடுப்பதற்காக நியமிப்பு செய்யும் அதிகாரி தீர்மானிக்கும் வகையில் போட்டிப் பரீட்சையொன்றும் தகைமைகளைப் பரிசீலனை செய்யும் நேர்முகப் பரீட்சையொன்றும் நடாத்தப்படும்.இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் பயிலுநர்களுக்கு 10.3.4 ஆம் பிரிவில் குறிப்பிட்ட ஏற்பாடுகள் ஏற்புடையவையாகும்.

**4.5 கணினி தட்டச்சு கோப்பாளர்கள் மற்றும் டெஸ்ரொப் பப்ளிஸ்சர்**

4.5.1 வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு -

(i) பயிற்சிக் காலத்தோடு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறிப்பிட்ட துறையில் ஐந்து (05) ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(ii) குறிப்பிட்ட துறை தொடர்பாக N.V.Q.4 ஆவது மட்டத்தில் தேர்ச்சி சான்றிதழ் பெற்றிருத்தல்.

4.5.2 உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு (கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதாவது ஒன்றைப்பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.)

(i) திணைக்களம்சார் பதவியொன்றில் ஏழு (07) வருடத்திற்குக் குறையாத ஒன்றிணைந்த செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருப்பதுடன், கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் கணிதம், மற்றும் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழியில் திறமை சித்தியுடன் ஆகக் குறைந்தது நான்கு (04) பாடங்களில் திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் கல்விப் பொதுத் தராதரப் (உயர்தர) பரீட்சையில் எந்தப் பிரிவிலேனும் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சையை தவிர்த்து) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

(ii) திணைக்களம்சார் பதவியொன்றில் ஏழு (07) வருடத்திற்குக் குறையாத ஒன்றிணைந்த செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் கணினி தட்டச்சு கோப்பாளர்கள் மற்றும் டெஸ்ரொப் பப்ளிஸ்சர்துறையில் (N.V.Q. 4) மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியம்.

4.5.3 பயிலுநர்களுக்கு –

(i) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் கணிதம், சிங்களம்/ தமிழ் / ஆங்கில மொழி உட்பட நான்கு (04) பாடங்களில் ஆகக் குறைந்தது திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆறு 06 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் அவசியம்.

(ii) கல்விப் பொதுத் தராதர (உயர்தரம்) பரீட்சையில் சகல பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சையை தவிர்த்து) ஒரே அமர்வில் சித்தியெய்தியிருத்தல் அவசியம். (பழைய பாடத்திட்டத்தின் படி மூன்று 03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

4.5.4 இப்பதவிக்காக ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் போது வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கிடையில் 30%, உள்ளக விண்ணப்பதாரிகளுக்கிடையில் 30%, பயிலுநர்களுக்கிடையில் 40% என்ற வீதத்தில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். இருப்பினும், ஒரு பிரிவில் போதுமான தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் இல்லாத சந்தர்ப்பத்தின் போது அத் தேவையான எண்ணிக்கையை ஏனைய பிரிவிலிருந்து சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்க அழுத்தகருக்கு அதிகாரமுண்டு.

**4.6 அச்சீட்டு நிறைவேற்றுநர்:**

4.6.1 வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு -

(i) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் உரிய துறையில் ஐந்து (05) வருடங்களுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

(ii) இத்துறைக்கு உரித்தான N.V.Q. மட்டம் 4 இல் தேர்ச்சி சான்றிதழ் பெற்றிருத்தல்.

4.6.2 உள்ளக விண்ணப்பதாரிகளுக்கானது (கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதாவதொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.)

(i) திணைக்களத்தில் பதினைந்து (15) வருடங்களுக்குக் குறையாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருக்கும் அச்சீட்டு அலுவல் உதவியாளர் சேவை தரம் II அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் உள்ள அலுவலராக இருத்தல் வேண்டும்.

(ii) திணைக்களத்தில் பத்து (10) வருடத்திற்குக் குறையாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்துள்ள அச்சீட்டு அலுவல் உதவியாளர் சேவை தரம் II அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திலுள்ள அலுவலராக இருத்தல் மற்றும் இலங்கை அச்சக நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் புத்தகம் கட்டுதல் சம்பந்தமான பாடநெறியில் தேர்ச்சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) திணைக்களம்சார் பதவியொன்றில் ஏழு (07) வருடத்திற்குக் குறையாத ஒன்றிணைந்த செயலூக்கமுள்ள திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில், கணிதம், சிங்களம்/ தமிழ் / ஆங்கில மொழியில் திறமைச்சித்தி உட்பட ஆகக் குறைந்தது நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியெய்தியிருத்தல் மற்றும் கல்விப் பொதுத் தராதரப் (உயர்தர) பரீட்சையில் ஏதேனும் பிரிவில் (சாதாரண பொதுப் பரீட்சையை தவிர்த்து) ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) திணைக்களம்சார் பதவியொன்றில் ஏழு (07) வருடங்களுக்குக் குறையாத ஒன்றிணைந்த செயலூக்கமுள்ள திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருப்பதுடன், புத்தகம் கட்டுதல் சம்பந்தமாக தேசிய தொழிற்றுறை தகைமையில் (N.V.Q.4) ஆம் மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

4.6.3 பயிலுநர்களுக்கு -

(i) கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் கணிதம், சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ்ஞானம் உட்பட நான்கு (04) பாடங்களில் ஆகக் குறைந்தது திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

(ii) கல்விப் பொதுத் தராதரப் (உயர்தர) பரீட்சையில் ஒரே தடவையில் சகல பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும. (பழைய பாடத் திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் போதுமானதாகும்.)

4.6.4 இப்பதவிகளுக்காக ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் போது வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கிடையில் 30%, உள்ளக விண்ணப்பதாரர்களுக்கிடையில் 30%, பயிலுநர்களுக்கிடையில் 40% என்ற வீதத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். இருப்பினும் ஒரு பிரிவில் போதுமான தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இல்லாத நிலையில் தேவையான எண்ணிக்கையுடையவர்களை மற்றைய பிரிவிலிருந்து ஆட்சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்க அழுத்தகருக்கு அதிகாரமுண்டு.

4.6.5 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் இந்த பதவிகளுக்கான உள்ளக விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை தொடர்பாக 10.3.8 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

**4.7 அச்சீட்டு தொழில்நுட்பவியலாளர்:**

4.7.1 உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு -

(i) கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் கணிதம், சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் மற்றும் அப் பாடங்களுள் ஆகக் குறைந்தது இரண்டு (02) பாடங்களில் திறமை சித்தி பெற்றிருத்தல்.

(ii) திணைக்களத்தில் உருக்கி ஒட்டுநர் / மின்சார தொழிலாளியாக ஐந்து (05) வருடத்திற்குக் குறையாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.7.2 பயிலுநர்களுக்கு -

(i) கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் கணிதம், சிங்களம்/ தமிழ் / ஆங்கிலமொழி உட்பட நான்கு (04) பாடங்களில் ஆகக் குறைந்தது திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) கல்விப் பொதுத் தராதரப் (உயர்தர) பரீட்சையில் சகல பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்த்து) ஒரே அமர்வில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.)

4.7.3

(i) இந்த பதவிக்காக உள்ளக விண்ணப்பதாரர்களுக்கிடையில் 80%, பயிலுநர்களுக்கிடையில்20%என்ற சதவீதத்துடன் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர். இருப்பினும், ஏதேனும் ஒரு பிரிவில் போதுமானளவு தகைமைகளுடன் விண்ணப்பதாரிகள் இல்லாதிருக்கும் சந்தர்ப்பங்களில் அவ்வெண்ணிக்கையை ஏனைய பிரிவிலிருந்து ஆட்சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்க அழுத்தகருக்கு அதிகாரமுண்டு.

(ii) இப்பதவிக்காக உள்ளக விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப்படுவர்.கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை தொடர்பில்10.3.8 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

5. மேலே குறிப்பிடப்பட்டுள்ள 4.1.1(i), 4.2.1(i), 4.5.1(i), 4.6.1(i), பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து வருட சேவைக் காலத்திற்குள் விண்ணப்பதாரிகளின் சேவைக்கான சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்துள்ளார்களென உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

08-296

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.